**DEPOSITION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 128/2023.**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-9/Lw-10 |
| Name | : | Mr. Venkatesh |
| Father Name | : | Palanisamy |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.11.2025.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்
அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் டீச்சர் காலனியில் வசித்து வந்து டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். 02.08.2022 ம் தேதி என் மனைவியுடன் நான் கோவிலுக்கு சென்று இருந்தேன். பெருமாநல்லூரில் உள்ள கொண்டாத்தம்மன் கோயிலுக்கு சென்று இருந்தேன். அந்த சமயத்தில் அங்கு கூட்டமாக இருந்தது. என்னவென்று விசாரித்த போது இரண்டு, மூன்று நபர்கள் பிரச்சனை செய்ததாகவும் அதைப்பற்றி போலீசார் விசாரித்துக்

கொண்டிருந்தார்கள். என்னை சாட்சியாக இருந்து கொள்ளும்படி சொன்னார்கள். அதனால் நான் சாட்சியாக இருந்தேன். அந்த சமயத்தில் போலீசார் விசாரணை செய்த நபர்கள் என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்சமயம் அவர்கள் நீதிமன்றத்தில் உள்ள நபர்களா என்று அரசு வழக்கறிஞர் கேட்டபோது இல்லை என்று சாட்சி கூறுகிறார்.

2. அந்த சமயத்தில் என்னுடன் சாட்சியாக இருந்த நபர் பற்றி விவரங்கள் எனக்குத் தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். அதேபோல் தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த சமயத்தில் கூட்டத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். கையொப்பம் செய்யும்படி சொன்னார்கள். கையொப்பம் செய்தேன். அந்த சமயத்தில் போலீசார் என்னை விசாரித்தார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ–9. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ–10.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.11.06 18:38:26 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.

**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 128/2023**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-10/ Lw-18 |
| Name | : | Mr. Udayakumar |
| Father Name | : | Nachimuthu |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.11.2025.

**எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்**
**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் சிறப்பு இலக்கு படை மாங்கரை முகாமில் காவல் ஆய்வாளராக பணியுள்ளேன். கடந்த 02.08.2022-ம் தேதி அதிகாலை 1.30 மணிக்கு திருப்பூர் வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவியாளர் வனஜா நிலைய பொறுப்பில் இருந்த போது திருப்பூர் அரசு மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் ஆனந்த் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து திருப்பூர் வடக்கு காவல் நிலைய குற்ற எண் 890 2022-ன் படி இ.த.ச பிரிவுகள் 147, 148, 447, 294 பி, 323,

324, 307 படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அதன் பிறகு வழக்குக் கோப்பை என்னுடைய விசாரணைக்கு வைக்கப்பட்டது.

2. வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நான் 2.8.2022 ஆம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் சக்தி, முருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வீட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர், வரைபடம் என்னால் தயார் செய்யப்பட்டவை. பார்வை மகஜர் அ.சா.ஆ**–11.** வரைபடம் அ.சா.ஆ**–12**. அதன்பிறகு காலை 7:15 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்த சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட ரத்தக்கரை படிந்த மண்வெட்டி ஒன்றை மேலே சொன்ன சாட்சிகள் முன்நிலையில் கைப்பற்றுதல் மூலம் கைப்பற்றினேன்.

3. அந்த சமயத்தில் ரத்தக்கரை படிந்த மண்வெட்டியுடன், ரத்தம் கலந்த மாதிரி மண், சம்பவ இடத்தில் இருந்த மாதிரி மண் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜர் நான் தயார் செய்தது. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ–13. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் மண்வெட்டி, ரத்தக்கரை படிந்த மாதிரி மண் மற்றும் ரத்தக்கரை படியாத மாதிரி மட்டும் தான் நான் கைப்பற்றி நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததாகும். மண்வெட்டி ச.பொ.–1, ரத்தக்கரை படிந்த மாதிரி மண் ச.பொ.2, சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட மாதிரி மண் ச.பொ3.

4. அதன் பிறகு சாட்சிகள் கருப்பசாமி, ஜெகநாதன், விஜயகுமார், செந்தில்குமார், சக்தி மற்றும் முருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையின் மூலம் சம்பவம் நடந்தது உண்மை என்று எனக்கு தெரிய வந்ததால் 2.8.2022 ஆம் தேதி மதியம் ஒரு மணி அளவில் திருப்பூர் பெருமாநல்லூர் கொண்டத்து காளியம்மன் கோயில் அருகே சம்பந்தப்பட்ட காளிதாஸ், விக்னேஷ் ஆகிய எதிரிகளை சாட்சிகள் அடையாளம் காட்டியதின் அடிப்படையில் கைது செய்தேன்.

5. அன்றைய தினம் மதியம் 1.15 மணிக்கு எதிரி விக்னேஷ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சாட்சிகள் சக்திவேல், வெங்கடேஷ் ஆகியோர் முன்னிலையில் தனிச்சியாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எந்த ஒரு வற்புறுத்தாலும் இன்றி பதிவு செய்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் விக்னேஷ் என்னிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகும் அது

அ.சா.ஆ–14. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி விக்னேஷ் தன்னிச்சையாக முன்வந்து சம்பவத்திற்கு பயன்படுத்திய வாள் ஒன்றை சாட்சிகள் முன்னிலையில் எடுத்துக் கொடுத்ததை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன்.

6. சம்பவத்திற்கு பிறகு எதிரிகள் சம்பவ இடத்திலிருந்து தப்பிக்க பயன்படுத்திய TN ன் 38C96 93 86 eicher வாகனத்தை கைப்பற்று மூலம் கைப்பற்றினேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மாதிரி தான் அப்போது என்னால் தயார் செய்யப்பட்டது அ.சா.ஆ– 15 தற்போதையிடம் காண்பிக்கப்படும் வாள் தான் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டது. அது ச.பொ– 4. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட நான்கு சக்கர வாகனம் இடைக்கால பொறுப்பில் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டு இருப்பதால் சாட்சியிடம் புகைப்படத்தை காண்பித்து அடையாளம் காண்பிக்க அனுமதி கோரினார். சட்டத்திற்கு உட்பட்டு அந்த அனுமதி வழங்கப்பட்டது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள ஈச்சர் வாகனத்தை தான் நான் கைப்பற்றுதல் மூலம் கைப்பற்றினேன். அந்தப் புகைப்படம் அ.சா.ஆ–16. புகைப்படத்தில் உள்ள ஈச்சர் வாகனம் ச.பொ–5.

7. அதன் பிறகு 10.08.2022 ஆம் தேதி வழக்கின் புகார்தாரர் ஆனந்த் சம்பவத்தினால் பாதிப்படைந்த சிவக்குமார், சேக்அப்துல்லா, சுரேஷ், குப்புசாமி, தினேஷ் குமார் ஆகியோர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு 24.8.2022 ஆம் தேதி இந்த வழக்கில் மற்ற எதிரிகளான பாலமுருகன், முனியாண்டிசெல்வம், மணிகண்டன், கண்ணன் ஆகியோர் உயர் நீதிமன்றத்தின் மூலம் முன்ஜாமின் பெற்றனர். பிறகு 17.11.2018 ஆம் தேதி புகார்தாரருக்கு சம்பவத்தின் போது சிகிச்சை அளித்த மருத்துவர் அருண் மொழியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் தாரருக்கு சிகிச்சையின் போது வழங்கப்பட்ட சிகிச்சை பொறுத்து கொடுக்கப்பட்ட காயச் சான்றிதழ் பெற்றேன்.

8. அதன் பிறகு அன்றைய தினம் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட மற்றொரு சாட்சியான சிவக்குமாருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கேசவ மூர்த்தியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சிகிச்சையின் போது கொடுக்கப்பட்ட காய் சான்றிதழை பெற்றேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கேசவ மூர்த்தி மருத்துவர் காயச் சான்றிதழ் நான் பெற்றது அந்த காயச் சான்றிதழ் அ.சா.ஆ–17. இதன்

பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு வழக்கில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட சட்டப்பிரிவுகளான 147, 148,447 294 பி, 323, 324, 307 இருந்து வழக்கின் சட்டப்பிரிவுகளை சட்டப்பிரிவுகளின் கீழ் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை என்னால் தயார் செய்யப்பட்டவை. சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை படிவம் அ.சா.ஆ–18. வழக்கு சொத்துக்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றிய பிறகு படிவம் 95 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் மண்வெட்டி ரத்த கரை படிந்த மண் படியாத மண்ணுக்கு உரிய படிவம் 95. படிவம் 95 அ.சா.ஆ– 19 மற்றும் வாள், நான்கு சக்கர வாகனம் ஆகியவை பொறுத்து தயார் செய்த படிவம் 95. படிவம் 95 அ.சா.ஆ–20.

9. அதன் பிறகு வழக்கில் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என்பது தெரிய வந்ததால் எதிரிகள் பாலமுருகன் விக்னேஷ் மணிகண்டன் காளிதாஸ் முனியாண்டி செல்வம் கண்ணன் ஆகியோர் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294 பி, 324, 307, 449, 326 உ/இ 34 இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் முதல் விசாரணையில் தெரிவித்துள்ளவாறு சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த ஒரு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்யவில்லை. வழக்கிற்காக காவல் நிலையத்தில் தயார் செய்து உள்ளேன் என்றால் தவறு. சம்பவ இடத்தில் நான் எந்த ஒரு ரத்தக்கரை படிந்த மண், ரத்தக்கரை படியாத மண் மற்றும் மண்வெட்டி ஆகியவற்றை நான் சொன்னவாறு கைப்பற்றவில்லை என்றால் தவறு. மூன்றாவது எதிரி விக்னேஷை சொன்ன நேரத்தில் கொண்டத்து மாரியம்மன் கோயில் அருகே நான் கைது செய்யவில்லை என்றால் தவறு, மூன்றாவது எதிரி விசாரணையின் போது தன்னிச்சையாக முன்வந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் என்னிடம் சாட்சிகள் முன்னிலையில் கொடுக்கவில்லை என்றால் தவறு.

2. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தன்னிச்சையாக முன்வந்து மூன்றாவது எதிரி வழக்கு சொத்துக்களை என்னிடம் ஒப்படைத்ததாக சொல்வது பொய் வழக்கு சொத்துக்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால்

தவறு. முதல் விசாரணையில் தெரிவித்துள்ளவாறு எந்த ஒரு அரசு தரப்பு சாட்சியும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அனைத்து ஆவணங்களும் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. எந்த ஒரு சாட்சியம் என்னிடம் சாட்சியம் அளிக்கவில்லை. அனைத்து ஆவணங்களும் தயார் செய்துள்ளீர்கள் என்றால் தவறு. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் தவறு. முறையான விசாரணை மேற்கொள்ளாமல் சரியான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாமல் தவறான குற்ற அறிக்கையை தாக்கல் செய்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.11.06 18:38:36 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.